# மரியாயின் சேனையின்
# 15 வது ஆண்டு விழா




ROSARIO
AVE
MARIA

Most Rev. Dr. Rayappu Joseph, D.C.L. Rome
Bishop of Mannar, Bishop's House, Mannar, Sri Lanka.

Tel-023-2222503: 0718428055: 023-2222710; Fax: 0232222709
E-mail: bishop.rayappu@gmail.com

## வெள்ளிவிழாக் காணும் மரியாயின் சேனையினருக்கு மன்னார் ஆயரின் ஆசியுரை

பிரான்ஸ் நாட்டில் வாழும் தமிழ்க் கத்தோலிக்க மக்கள் தாம் ஆரம்பித்த மரியாயின் சேனையினுடைய 25 வருட நிறைவை வெள்ளி விழாவாகக் கொண்டாடும் இவ்வேளையில் அவர்களை வாழ்த்துவதிலும், பாராட்டுவதிலும், அவர்களுக்கு ஆசிர்கூறுவதிலும் மகிழ்ச்சியடைகின்றேன். எமது அன்புக்குரிய மக்கள் புலம்பெயர்ந்து வாழும் நிலையிலும் தமது விசுவாச வாழ்வை, பணி வாழ்வை காந்திரமாக, உறுதியாக வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள் என்பதற்கு இவ்விழா ஓர் அடையாளமாக, சாட்சியாக விளங்குகின்றது எனலாம்.

உலகில் வளர்ந்துவரும் தீய சக்திகளை எதிர்த்துப்போராட கத்தோலிக்க திருச்சபையில் ஒரு சேனை தோன்றியது. அது மரியாயின் தலைமையில் உருவான மரியாயின் சேனை ஆகும். ''உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன்'' (தொ. நூ. 3:15) என்று இறைவன் கூறியதை நிறைவேற்ற மரியாயின் சேனை பாடுபடுகின்றது. மரியாயின் சேனை உறுப்பினர்கள் தமது ஆன்ம வாழ்வில் வேரூன்றி, பிறர் ஆன்ம நலநலனை நாடுகின்றார்கள்.

கத்தோலிக்க திருச்சபையின் தனிப்பெரும் இயக்கங்களுள் ஒன்றான மரியாயின் சேனை 1921 செப்ரம்பர் 7ஆம் நாள் தோற்றுவிக்கப்பட்டது. இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்பே பொதுநிலையினரின் அப்போஸ்தலத்துவம் பற்றி சிந்தித்த சகோதரர் பிராங்க் டஃப் என்பவர், அயர்லாந்து நாட்டின் ட்ப்ளின் நகரில் இந்தப் பொதுநிலையினர் இயக்கத்தைத் தோற்றுவித்தார். திருத்தந்தையர்கள் பதினொராம் பத்திநாதர், பன்னிரெண்டாம் பத்திநாதர், இருபத்துமூன்றாம் அருளப்பர், ஆறாம் சின்னப்பர், இரண்டாம் அருள் சின்னப்பர் ஆகியோர் சகோதரர் பிராங்கி டஃபின் செயற்பாடுகளையும், உலகம் தழுவிய அளவில் சேனையின் பணிகளையும் உளமாரப் பாராட்டியுள்ளனர். ''மரியாயிள் சேனை திருச்பையின் உண்மையான முகத்தைப் பிரதிபலிக்கிறது'' என்று திருத்தந்தை புனித இருபத்துமூன்றாம் அருளப்பர் கூறியுள்ளார். '' மரியாயின் சேனை உலகம்முழுவதும் புனிதத்தின் கனிகளைத் தந்துகொண்டிருக்கிறது'' என திருத்தந்தை புனித இரண்டாம் அருள் சின்னப்பர் குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய திருச்சபையில் கட்டுக்கோப்புக்கும் நிர்வாக இயக்காற்றலுக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிற இயக்கங்களுள் ஒன்று மரியாயின் சேனை ஆகும். கடவுள் முன்னிலையில் நாம் ஒன்றுமில்லை என்பதை உணர்ந்து அதை நேர்மையாக ஒப்புக்கொளவதும். நம் ஒன்றுமில்லாமை மட்டும்தான் நம் உடைமை என்பதைக் கண்டுபிடிப்பதும் சேனையாரின் அடிப்படை இயல்பு ஆகும்.

உறுதியான செயவாழ்வில் பிறக்கும் பணிகளே நீடித்த. நிலைத்த பயன்தரும் என்பதை சேனையாளர்கள் உணர்ந்துகொள்ளவேண்டும். எனவே செபவாழ்வுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் மரியன்னையின் வழியில் சேனையாளர்கள் தொடர்ந்து பயணிக்க ஆசித்து நிற்கின்றேன், உலகியல் தீமைகளுக்கு எதிராகப் போராடும் ஆள்மீகப் படையணியாக, நலிவுற்ற, தேவையில் இருக்கும் சின்னஞ்சிறிய சகோதரர்களுக்கு ஆதரவாக, திருச்சபையின் வலக்கரமாக, வீரர்களாக சேனையாளர்கள் திகழ எனது வாழ்த்துக்களையும், ஆசீரையும் தெரிவிக்கின்றேன்.

**அன்புடன் கிறிஸ்துவின் பணியில்**

**மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை மன்னார் ஆயர்**

# வாழ்த்துக்கள்



பிரான்ஸ் நாட்டிலே, பாரீஸ் மாநகரிலே அமலோற்பவ அன்னை பிரசீடியம் என்னும் பெயர் கொண்ட மரியாயின் சேனையினர் 15ம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் இந்த நாளிலே நானும் உங்களோடு சேர்ந்து அன்னை மரியா வழியாக இறைவனுக்கு நன்றி சொல்கின்றேன்.

இறைவனது மீட்புத் திட்டத்திலே, ''இதோ ஆண்டவரின் அடிமை'' என்று சொல்லி தன்னை முழுமையாக அர்ப்பணித்த நாளிலிருந்து, இன்று வரையும் சிறப்பாக, சிலுவையடியிலே நம்மைப் பொறுப்பெடுத்துக் கொண்ட நாளிலிருந்து, நமது பாசமிகு அம்மாவாகவும், துன்ப துயரங்களிலே ஓடோடி வந்து உதவிக் கரம் கொடுக்கின்ற சகாய அன்னையாகவும், நமது தேவைகளிலே பரிந்துரைக்கின்ற தாயாகவும் இருந்து, அமலோற்பவ அன்னை பிரசீடிச சேனையினர் வாழ்விலும், பணியிலும் உந்து சக்தியாக விளங்குகின்ற அன்னை மரியாவுக்கு, கோடான கோடி நன்றிகளை சாற்றுவதிலே பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

பொதுநிலையினருக்கான அப்போஸ்தலப் பணியை அர்ப்பணிப்போடு சிறப்பாக ஆற்றி வருவது மரியாயின் சேனையே.

தொடர்ந்தும் மரியாயின் சேனை வளர்ச்சி பெறவும், அதன் நோக்கத்தை. உள்வாங்கிக் கொள்ளவும், இறையருளோடும், ஆன்மீக பலத்தோடும் செயல்பட வாழ்த்தி நிற்கின்றேன்.

**இயக்குனர்**
**அ.லீனஸ் சொய்சா அ.ம.தி.**
**08-12-2014**
**இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்**
**பிரான்ஸ்**

# OBLATE OF MARY IMMACULETE

**« SANGAMAM »**
**St.Mary's Lane**
**Kopay South**
**Kopay (NP) SRILANKA**

**பி**ரான்ஸ் தமிழ் கத்தோலிக்கப் பணியகத்தின் நிறைவை மரியாயின் சேனையின் பயணத்திலே, 15ம் ஆண்டு நிறைவை நன்றியோடு நினைவு கூர்வது எங்கள் மனங்களுக்கு மகிழ்வையும், நிறைவையும் தருகின்றது. மேலும் இவர்களின் இந்த திடகாத்திரமான பயணத்திலே சில தடவைகள் சேர்ந்து பயணித்து, சில கருத்துக்களை வழங்கியது, எனது மகிழ்ச்சியை இரட்டிப்பாக்குகின்றது. இந்த மகிழ்ச்சியில் நனைந்து, நானும் இந்த மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகிறேன்.


தன்னுடைய மகனும், எங்கள் ஆண்டவராகிய இயேசுவின் வாழ்விலும், பணியிலும் மிகவும் நெருக்கமாக பங்கெடுத்து, தன் மகனின் மீட்புப்பணியிலே தன்னை முழுவதுமாக அர்ப்பணித்தவள் அன்னை மரியாள். இந்த அன்னை, நம்முடைய தொடர் மீட்புப் பணியிலே எம்முடன் மிகவும் நெருக்கமாகப் பங்கெடுத்து வருகின்றவள். சிறப்பாக, எம் சொந்த அன்னையரின் சவால்கள், சுமைகள் நிறைந்த வாழ்விலே சாந்தியை அள்ளி வழங்கும் அமுத சுரபி அன்னை மரியாள்.

வெளிநாடுகளில் வாழும் எம் அன்னையரின் இன்றைய சுமைகள் ஏராளம். பொருளாதாரச் சுமை, குடும்பச் சுமை, வாழ்க்கைச் சுமை என்று அவர்களின் சுமைகளின் பட்டியல் நீண்டு செல்கின்றது. இன்னொரு பக்கம் இந்தச் சுமைகளைப் போக்க தற்காலிகமாகச் சுகங்களைத் தேடிச் செல்லுகின்ற இக்காலத்திலே, உண்மையான சுமைதாங்கி இயேசு ஆண்டவரையும், அவருடைய தாய் அன்னை மரியாளையும் தேடிச் செல்வோர் வெகு சிலரே. இந்தச் சிலருள் பிரான்ஸ் தமிழ் கத்தோலிக்க மரியாயின் சேனையை பெருமையுடன் நோக்குகின்றேன்.

மரியாயின் சேனையினரின் அர்ப்பணிப்புடனான தேவதாயின் இந்தப் பக்தியை, மற்றவர்களுக்கு சிறப்பாக, அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்ற அவர்களின் பணியார்வத்தைப் பாராட்டுகிறேன். இந்தப் புனிதமான பணிக்குப் பக்கபலமாக இருக்கும் பிரான்ஸ் தமிழ் கத்தோலிக்க பணியகத்தின் ஆன்மீக இயக்குனர், மரியாயின் சேனையின் தலைவி இவர்களை நெஞ்சார வாழ்த்தி, இயேசு ஆண்டவரின் ஆசீர்வாதங்களையும், அன்னை மரியாளின் பரிந்துரைகளையும் வேண்டி நிற்கிறேன்.

**அருள் நிறை மரியே வாழ்க!**

**என்றும் இறையாசீருடன்**
**அருட்திரு செ.அந்தோனிமுத்து அ.ம.தி.**




**தூய ஆவி குடி கொண்ட**
**தூய ஆலயம் எம் அன்னைமரியை**
**தூய்மையுடன் எந்நாளும் போற்றிடுவோம்.**

மரியாவின் வாழ்த்தை எலிசபெத்து கேட்டபொழுது, அவர் வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று. எலிசபெத்து தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டார். அப்போது அவர் உரத்த குரலில் பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர். உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே! என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்? (லூக்: 1:41-44)

தன் நலம் மறந்து, பிறர் நலம் பேண தேடிவந்த அன்னை மரி, யாரென்பதை எலிசபேத்து எமக்கு விளக்கமாக எடுத்துரைக்கிறார். எனவே தேவதாயின் சேனைகளாக அழைக்கப்பட்டு, அர்ப்பணிப்பு செய்து கொண்ட நாம், எலிசபேத்தைப் போன்று அவளது புகழை உரத்த குரலில் மகிமை பொங்க, மகிழ்வுடன் வாழ்நாளெல்லாம் பறைசாற்றவேண்டும்.

அமல உற்பவ மாதா பிரசீடியத்தின் 15வது ஆண்டு விழாவை நிறை மகிழ்வுடன் கொண்டாடும் நாம், இறைவனுக்கு கோடான கோடி நன்றி கூறுவோம். புலம் பெயர் வாழ்விலும் பல தடைகள், வேலைப் பளுக்கள், போராட்டங்கள் மத்தியிலும், எமக்கு மரியாயின் சேனையர்களாக அழைப்பும் அர்ப்பணிப்பும் கிடைத்திருக்கின்றது.

எனவே நாம் இப்பிரசீடியத்தை எம் ஆன்மீகப் பணியகத்தில் உருவாக்கி, எம்மை ஊக்கத்துடன் ஒன்றிணைத்த அருட்தந்தை செபஸ்தியன் அடிகளாரையும், தொடர்ந்து எம் சேனையின் வளர்ச்சியில் உறுதுணையாக இருந்து எமக்கு ஊக்கமும், ஆக்கமும் தொடர்ந்து தந்த அருட் தந்தை அமலதாஸ் அடிகளாரையும், தற்போது அன்னை மரியின் மகிமையை பக்தியுடன் நாம் பரப்பவேண்டும் என எமக்கு ஊக்கம் தந்து கொண்டிருக்கும் அருட் தந்தை லீனஸ் சொய்சா அடிகளாரையும் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

எமக்குக் கிடைத்த இப்பெரும் பாக்கியம், எம் சந்ததியினரும் பெற்று அன்னையின் அருள் பெறவேண்டும். ஆகவே மரியாயின் சேனையினர் நாம் அனைவரும் ஒருமனப்பட்ட உள்ளத்துடன் தினமும் செபிப்போம். எம்பணி தொடர்ந்து, பிறர் அன்பு கொண்டு வாழ, தொடர்ந்து அன்னையின் சேனையினர் அணி வகுத்து உழைப்போம்.

**மரியே வாழ்க!**

**மரியாயின் சேனைத் தலைவி**
**றீற்றா செல்வரட்ணம்**



# ஆசிச் செய்தி

**« ஆண்டவரை எனதுள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது. என் மீட்பராம் கடவுள நினைத்து என் மனம் பேருவகை கொள்கின்றது »**

பிரான்ஸ் நாட்டின் ஒப்புரவு அன்னை ” ஆலயத்தில், ”அமல உற்பவ அன்னை என்ற பெயரில் இறைபணியாற்றி வரும் மரியாயின் சேனையினர், தமது சேனையின் சேவையில் பதினைந்தாவது ஆண்டு நிறைவின் மகிழ்ச்சியான இத்தருணத்தில், இலங்கை நாட்டின் யாழ் மறைமாவட்ட மரியாயின் சேனையின் முன்னாள் கொமிற்சியத் தலைவி என்ற வகையில், ஆசிச்செய்தி கூறுவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

- ♦ ”வல்லவராம் கடவுள் உனக்கு அரும் பெரும் செயல்கள் பல புரிந்துள்ளார்”
- ♦ ”மரியாயின் சேனையினர் யேசுவின் சாட்சிகள்”
- ♦ ”இதோ ஆண்டவரின் அடிமை“
- ♦ ”அவர் சொல்வதைச் செய்யுங்கள்” என்ற வார்த்தைகளுக்கேற்ப சேனையார் இறைபணியாற்ற அழைக்கப்பட்டது, ஒரு மகத்தான அழைப்பு.

அந்த அழைப்பை மேற்கொண்டு ஆன்மீக, சமூக குடும்ப நலச்சேவை பல ஆற்றி வருகிறீர்கள். இச் சேனை அங்கத்தவ குடும்பங்கள், தூர இடங்களில் வசிப்பவர்களாக இருந்தும், சேவைக்காக ஒன்று சேர்ந்து அன்னையின் பணியை’ மிகவும் திறம்படச் செய்வதும், பங்குத் தந்தையுடன் இணைந்து வீட்டுத் தரிசனங்களைச் செய்வதும், இச்சேவை பாராட்டுதற்குரியது.

மேலும் இச் சேனையின் தலைவி சகோதரி தவமலர் (றீற்றா) அவர்களும், செயலாளர் சகோதரி சகாயசிலி அவர்களும் இலங்கை நாட்டிற்கு வருகை தரும்போதெல்லாம், தங்கள் பல்வேறு கடமைகளின் மத்தியிலும் பணி ஆர்வம் கொண்டவர்களாக, யாழ் பேராலய ”மாசற்ற இருதய மாதா” பிரசீடியக் கூட்டங்களில் கலந்து கொண்டு, பிரான்ஸ் நாட்டில் அவர்கள் நடத்தும் மரியாயின் சேனை கூட்ட நிகழ்வுகள் பற்றி அளவளாவியும், யாழ் பேராலய சேவைகளைப் பாராட்டி எங்கள் சேனைக்கு பல உதவிகள் புரிந்துள்ளார்கள். எமது சேனையின் சார்பில் நன்றிகள் பல இவர்களுக்கு உரித்தாகட்டும்.

அத்துடன் “அமல உற்பவ அன்னை” பிரசீடிய அங்கத்தவர்களையும், அவர்களை நடத்தி வரும் அருட்தந்தையையும் பாராட்டி, இன்னும் பல இறைபணிகளை இச்சேனையார் செய்யவும், மேலும் பல ஆர்வமுள்ள சேனையாளர்கள் உள்வாங்கப்பட்டு, பல உதவி அங்கத்தவர்களின் செப, தவ வாழ்வின் மூலம் அன்னை வழி பயணித்து, மீண்டும் பல ஆண்டுகள் ஊழியம் புரிந்து அன்னையின் புகழ் சிறக்கவேண்டுமென ஆசிக்கின்றேன்.”

நம்பிக்கையாளர்களை கடவுள் ஒருபோதும் கைவிட மாட்டார்” என்ற நம்பிக்கையில் பங்குத் தந்தையுடன் இணைந்து சேனையின் அங்கத்தவர்கள் ஒற்றுமையாக, மரியாயின் சேவை சிறப்புற மேற்கொள்ள, உங்கள் யாவருக்கும் இறைவன் அருள் பாலிக்கவும் மரியாயின் பரிந்துரை கிடைக்கவும் பிராத்திக்கின்றேன்.

**மரியே வாழ்க!**

**அன்புடன் மரியாயின் சேவையில்**
**ஜோர்ஜ் புஸ்பசீலி**
**முன்னாள் கொமிசியறத் தலைவி**
**யாழ்- இலங்கை**



## மரியின் சேனையினருக்கு வாழ்த்துக்கள்

**ஆ**ண்டவன் அருட்துணையால், அன்னையின் அன்பில் ஒன்றித்து, அவள் அன்பினால் நீரூற்றி உரமிடப்பட்டு, 15 ஆண்டுகளாய் துளிர்த்து மலர்ந்த மரியாயின் சேனைக்கு, பாரிஸ்- புனித சூசையப்பர் பாடகர் குழாமுடன் இணைந்து வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

**"வைகறை போல் தோற்றம், திங்களைப்போல் அழகு, ஞாயிறு போல் ஒளி, பேரணி யாரிவளோ?**

ஆம்! அவளைப்பற்றி வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது.

♦ அன்னாவின் உதரத்தில் கருவான மரியா, பிறப்பு நிலைப் பாவக் கறை படியாமல் கடவுளின் தனி அருளால் பாதுகாக்கப்பட்டவள்.

♦ இயேசுவின் சிலுவைச் சாவு, மற்றும் உயிர்த்தெழுதல் மூலமாக நிகழ்ந்த மீட்புக்கு வழியாக அமைந்தவள்.

♦ வரலாற்றில் இயேசு வந்து தோன்றுவதற்கு முன்னரே கடவுள் அந்த மீட்பின் பலனை மரியாவின் வாழ்வில் எதார்த்தமாக்கினார்.

♦ மரியா கடவுளின் மகனாகிய இயேசுவைப் பெற்றெடுக்க கடவுளுக்கு உகந்த கருவியாக மாறியவள்.

♦ மரியா அமல உற்பவியாக உள்ளார் என்பதைக் கத்தோலிக்க திருச்சபையும் மரபு வழித் திருச்சபைகளும் ஏற்கின்றன.

இவ்வாறு அன்னை மரியாவைப்பற்றி எத்தனையோ கூறிக் கொண்டே போகலாம் அத்தகைய மரியாளுடன் இணைந்து செய்யும் சேவைக்கு ஈடிணை ஏதுமில்லை

**"மக்கள் தங்கள் தூய்மையான, மரியாவைப்போல எடுத்துக்காட்டான வாழ்வின் மூலம் கடவுளை மகிமைப்படுத்த வேண்டும்" என்பதை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட சபைதான் மரியாயின் சேனை.**

பதினைந்து ஆண்டுகளாக பரிஸ்- மரியாயின் சேனைக்கு கிடைத்திருப்பது அரும் பெரும் மகத்தான அழைப்பு. இவர்கள் மரியாளுக்காக தங்கள் வாழ்வை அர்ப்பணமாக்கி, அர்ப்பணத்துடன் பல செயல்பாடுகளைச் செய்து வருகின்றார்கள்.

**முக்கியமாக:**

* பங்கிலுள்ள அனைத்து மக்களையும் சென்று சந்திப்பது.

* நற்செய்தி அறிவிப்புப் பணி செய்தல்

* சேனையின் மனைகளில் உள்ள நோயாளிகளையும், முதியோரையும் சென்று உறுப்பினர்கள் மருத்துவ சந்தித்து, அவர்களோடு உறவாடி ஆறுதல் கூறி அவர்களுக்காக மன்றாடுதல்,

* மறைக்கல்வி பயிற்றுவித்தல்.

* மரியாவின் சொரூபத்தை பல வீடுகளுக்கும் எடுத்துச் சென்று அக்குடும்பத்துடன்

* இணைந்து சிறப்பாக அவர்களுக்காக ஜெபித்தல்.

* அனைத்து பொது வழிபாடுகளிலும் தனது முழுமையான பங்களிப்பை செய்து வருதல்

போன்ற இன்னும் எத்தனையோ சிறப்பான நற்பணிகளை புலம் பெயர் நாட்டிலும் அன்னையின் அன்பில் கட்டுண்டவர்களாய் செய்து வருகிறார்கள். மரியன்னையின் பெயரால் செய்து வரும் மரியாயின் சேனையினரின் இச் சேவை மகத்தானது.

இவர்கள் பணி மென்மேலும் சிறக்க எமது வாழ்த்துக்களும் ஜெபங்களும் உரித்தாகட்டும்.

வாழ்க மரியின் புகழ்! வளர்க அவள் சேனை!

08-12-2014

பாடகர் குழாம் தலைவி

றெஜீனா சிவகுமாரன்



## மரி அன்னை சேனையில்
## மறைபணிக்கு ஒரு வாய்ப்பு

**" என் ஆன்மா ஆண்டவரை போற்றிப் புகழ்கின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து என் மனம் மகிழ்கின்றது"**

இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப்பணியகத்தின் கீழ் இயங்கி வரும் எமது மரியாயின் சேனை 15வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் இவ்வேளையில், எமக்குத் தோன்றாத் துணையாக இருந்து எம்மைப் பாதுகாத்து வழிநடத்தி வந்த இறைவனுக்கும், எம்மீது அருள் பொழிந்து, வரங்களைப் வளர்த்து வந்த எமது தலைவியான மரி அன்னைக்கும், உள்ளத்தின் ஆழத்தில் இருந்து நன்றி கூறுகின்றேன்.

1999ம் ஆண்டு மார்கழித் திங்கள், 8ம் நாள் அமல உற்பவப் பெருவிழாவன்று " அமல மரி அன்னை பிரசீடியம்" என்ற இனிய பெயருடன் அன்றைய இயக்குனர் அருள்தந்தை மரிய செபஸ்தியன் அடிகளாரால் தோற்றுவிக்கப்பட்டு, கடந்த 15 வருடங்களாக இயங்கி வருகின்றது எமது மரியாயின் சேனை.

எமது மரியாயின் சேனைக்கு எனவே இந்த நன்னாளில் வித்திட்ட அருள்தந்தை மரிய செபஸ்தியன் அடிகளாரை அன்புடன் நினைவு கூர்ந்து, அவருக்கு எமது பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். அவரைத் தொடர்ந்து அடுத்த ஆறு வருடங்கள் எம்மை வழிநடத்தி வந்த அருட்தந்தை அமலதாஸ் அடிகளாருக்கும், எமது நன்றிகள்.

தற்போது எமது மரியாயின் சேனைக்கு எந்தவித குறையுமிலலாமல், எல்லாச் சலுகைகளையும் வழங்கி எம்மை அன்பாக வழிநடத்திக் கொண்டிருக்கும் எமது ஆன்மிகப் பணியக இயக்குனர் அருட்தந்தை லீனஸ் சொய்சா அடிகளாருக்கும் எமது நன்றியையும், பாராட்டையும் தெரிவிப்பதுடன், அவரின் பணிவாழ்வு சிறக்க இறையாசீர் வேண்டி எமது மரியாயின் சேனை வாழ்த்துகின்றேன்.

பொதுநிலையினரின் பொற்காலம் என அழைக்கப்படும் இக்காலத்தில், திருச்பையின் மறைப்பணிகளில் பங்கேற்கும் உரிமையும், கடமையும் பொதுநிலையினராகிய நமக்கும் உண்டு என்பதை மரியாயின்சேனை வலியுறுத்து கின்றது. மறைபணியாற்ற விரும்பும் பொதுநிலையினருக்கு, மரியாயின் சேனை ஒரு நல்ல வாய்ப்பைக் கொடுக்கிறது. ஆன்மாக்களுக்கு சேவை செய்வதும், குறிப்பாகத் துன்புறும் கொண்டு, மக்களுடன் நெருங்கிய உறவு அவர்களின் இன்ப துன்பங்களில் பங்கேற்பதும், பணித் தளங்களில், திருச்சபை அதிகாரிகளுக்கு, ஆன்ம மீட்புப் பணியில் ஒத்துழைப்புத் தருவதும், எமது நோக்கமாகும். எனவே மரியாயின்சேனை தனது வேலையை திறம்படச் செய்ய, தனது பணியில் வளர்ச்சி பெற ஆன்ம இயக்குனரையே நம்பியிருக்கின்றது. உறுப்பினர்களிடம் ஏற்படும் ஊக்கமின்மையைத் தகர்த்தெறிந்து உற்சாகமூட்டவேண்டியவர் அவரே. எமது சேனைக் கலந்து கொண்டு எமக்கு வழிகாட்டியாகவும், கூட்டங்களில் செயல்படும்படி பணிவன்புடன் கேட்டுக் ஆலோசகராகவும், கொள்கிறோம். 15 வருட நிறைவைக் கொண்டாடும் எமது மரியாயின் சேனை, தொடர்ந்தும் பயணித்து, இன்னும் பல்லாண்டு இறையருளோடு வளர்ந்து பயன்தர ஆசிக்கின்றேன்.

**முன்னாள் தலைவி**
**திருமதி மனோகரி பொன்கலன்**

# இயேசுவுக்கு நன்றி

- "அருள் மிகப் பெற்றவளே வாழ்க!
  ஆண்டவர் உம்மோடு இருக்கின்றார். (லூக்: 1:28)
- பெண்களுள் நீர் ஆசி பெற்றவர், உம் வயிற்றில் வளரும்
  குழந்தையும் ஆசி பெற்றதே. (லூக்: 1:42)
- இறைசித்தம் நிறைவேற இறைவனின் தாயானீர்!மரியே வாழ்க!

பிரான்ஸ் வாழ் அமல உற்பவ மரியன்னை பிரசீடியமானது 1999ம் ஆண்டு மார்கழி மாதம் 8ந் திகதி அருட்திரு: செபஸ்தியன் (O.M.I.) அடிகளாரால் ஒப்புரவு அன்னை சிற்றாலயத்தில் வித்திடப்பட்டது. ஐரோப்பிய நாடாகிய பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பரீஸ்சில் இலங்கைத் தமிழ் கத்தோலிக்க மக்களுக்கென முதன் முறையாக மரியாயின் சேனையை ஆரம்பித்த பெருமை அருட்தந்தை செபஸ்தியன் அடிகளாரையே சாரும்.

மரியாயின் ஊழியர்களாகிய நாம், இறைமக்களோடு இணைந்து வருடாவருடம் மார்கழி மாதம் 8ந் திகதி அன்னையின் பெருவிழாத் திருப்பலியைக் கொண்டாடி வருகிறோம். 2004ம் ஆண்டு 5வது வருட நிறைவுத் திருவிழாவை அருட்தந்தை: அமலதாஸ் அடிகளாருடன் இணைந்து ஒப்புக் கொடுத்து சிறப்பாக அன்னைக்கு நன்றி கூறினோம். எங்கள் பிரசீடியமானது மாதத்திற்கு 2 தடவைகள் நடைபெறுகிறது. மரியாயின் சேனையினர் அருட் தந்தையுடன் இணைந்து நோயா-ளரைப் பார்வையிடுவது, நோயாளருக்கு நற்கருணை கொடுக்கப் போவது, போன்ற உதவிகளைச் செய்து வந்தோம். இத்துடன் பிரான்ஸ் கியூறியாவுடனும் இணைந்து செயல்பட்டு வந்தோம்

புலம் பதிந்த நாட்டில் பற்பல மக்களுடன் ஆன்மீகப்பணி புரிந்த அருட்தந்தையர்கள் தங்கள் வேலைப்பழுவைச் சிறிதும் பொருட்படுத்தாமல், மரியாவின் மகத்துவம் பற்றி சிறப்புரை ஆற்றியும், ஆன்மீக வழி நடத்துதலிலும், உதவிக் கரம் நீட்டி வந்தார்கள். சேனையின் அங்கத்தவர்கள் குடும்பப் பொறுப்புக்கள், உறவுகள், பிரயாணங்கள் என்று பல சிரமங்கள் மத்தியில் முழுமையாக தங்களை அர்ப்பணித்து நிறைவான ஊழியம் புரிய நல்ல மனதைக் கொடுத்த இறைமகன் யேசுவுக்கு நன்றி.

அருட்தந்தை லீனஸ் சொய்சா பணியகத்தைப் பொறுப்பேற்றது மட்டுமல்லாமல் எத்தனையோ சிரமங்களுக்கு மத்தியில் மரியாயின் சேனையையும் பொறுப்பெடுத்து நடாத்தி வருகின்றார்.

மரியாயின் சேனையைச் சந்தித்து வேதாகம விளக்கவுரையும் தருகின்றார். தற்பொழுது, அன்னையின் அருளாலும் இறைமகன் கிறீஸ்துவின் ஆசீராலும், ஆன்மீக இயக்குனரின் வழிநடத்துதலாலும், அங்கத்தவர்களின் ஒத்துழைப்பினாலும், ஆண் பெண்கள் உட்பட 25 அங்கத்தவர்கள் மரியாயின் கொடியின் கீழ் இயங்கி வருகிறார்கள்.

பிரான்ஸ் வாழ் அமல உற்பவ மரியன்னை பிரசீடியம் தனது 15வது வருட நிறைவை யொட்டி, ஜெபங்களையும், வாழ்த்துக்களையும், அருட் தந்தையவர்கட்கும், 11பணித்தள மக்களனைவருக்கும் கூறி அன்னையின் பாதத்தில் ஒப்படைத்து விடை பெறுகிறேன்.

நன்றி

என்றும் அன்புடன்
சுகிர்தா அந்தோனிப்பிள்ளை



2007




# மருதமடு மாதாவிற்குச் செபம்

மருதமடுத் திருப்பதியிலே பேருதவி புரிகின்ற பரிசுத்த செபமாலை மாதாவே, பரலோக பூலோக அரசியே! கஸ்திப்படுகிறவர்களுக்கு ஆறுதலே! பாவிகளின் தஞ்சமே உம்முடைய இன்பமான சந்நிதானம் தேடி வந்தோம். உம்முடைய கருணையை வேண்டி வந்தோம் தாயே! உலகில் எங்கள் ஆண்டவள் நீரல்லவோ, எங்கள் தஞ்சம் நீரல்லவோ! எங்கள் அன்பான அன்னை நீரல்லவோ! எங்கள் ஆதரவும், எங்கள் சந்தோசமும், எங்கள் நம்பிக்கையும் நீரல்லவோ! நீர் எங்களுடைய தாயார் என்பதை எங்களுக்கு காண்பியும். பிள்ளைகள் செய்த குற்றங்களைத் தாய் பாராட்டுவாளோ? உம்மைத்தேடி வந்த நிர்ப்பாக்கியர்கட்கு உதவியாய-ிரும். அழுகிறவர்களை அரவணையும். அல்லல் படுகிறவர்களுக்கு ஆறுதல-ாயிரும். நீர் இரங்காவிட்டால் எங்களுக்கு வேறார் இரங்குவார்? நீர் உதவாவிட்டால் எங்களுக்கு வேறார் உதவுவார்? நீர் ஆதரியாவிட்டால் எங்களை வேறார் ஆதரிப்பார்? நீர் நினையாவிட்டால் எங்களை வேறார் நினைப்பார்? தஞ்சமென்று ஓடிவரும் அடியார் மேலே தயவாயிரும் தாயே! தயைக்கடலே! தவித்தவர்களுக்கு தடாகமே! தனித்தவர்களுக்கு தஞ்சமே! உம்முடைய சந்நிதானம் தேடிவந்தோம்! காடுகளைக் கடந்து ஓடிவந்தோம்! துன்பம், பிணி, வறுமை முதலிய கேடுகளால் வாடிவந்தோம்! எங்கள் நம்பிக்கை வீண் போகுமோ? எங்கள் மன்றாட்டு மறுக்கப்படுமோ? எங்கள் யாத்திரை பலனற்றதாய்ப் போகுமோ? எங்கள் அழுகைக் கண்ணீர் உம்முடைய இருதயத்தை உருக்காது போகுமோ? அப்படியாகுமோ அம்மா? அடியோர்க்கு அன்பான அம்மா, செபமாலை அம்மா எங்களை முழுவதும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம். எங்களை ஏற்று ஆசீர்வதித்தருளும் ஆமென்.



2008



எடல் குயின்



அல்பிலாம்ப்



**பிராங்க் டஃப்**

**பாரெங்கும் பரமனின் அரசு பரந்திட பணியாற்றும்**
**மரியாயின் சேனையைத் தோற்றுவித்தவர்**

# துன்ப முடிச்சுக்களை அவிழ்க்கும் அன்னையிடம் செபம்

கன்னிமரியே, அழகு அன்புத்தாயே, மன்றாடும் குழந்தையை,
ஒருபோதும் புறக்கணியாத அன்னையே,
உமது திரு இதயத்திலிருந்து, பெருக்கெடுத்து வழியும் அன்பினாலும்,
முடிவில்லாத இரக்கத்தினாலும்,
குழந்தைகள் எமக்காய் அயராது உழைக்கும்,
திருக்கரங்கள் கொண்ட திருவே,
உமது கருணைப் பார்வையை எம்மீது திருப்பி,
எனது வாழ்வைத் திணறவைக்கும் முடிச்சுக்களைக் கண்ணோக்கியருளும்,
எனது துன்பம், வலி, செயலிழக்கச் செய்யும் துன்பமுடிச்சுக்கள்,
அனைத்தையும் நீர் அறிவீர்,
எங்கள் வாழ்க்கை நூலில் விழும் முடிச்சுக்களை அவிழ்க்க,
கடவுளிடமிருந்து பொறுப்பு பெற்றதாயே,
உமது திருக்கரங்களில் எனது வாழ்வை ஒப்படைக்கிறேன்,
உமது இரக்கப்பெருக்கை, ஒருபோதும் ஒருவரும் நிறுத்த முடியாதென்றும்
உம்மால் அவிழ்க்க முடியாத முடிச்சு,
உலகில் ஒன்றுமில்லை என்றும் நம்புகிறேன்,
வல்லமையின் தாயே, ஆண்டவர் இயேசுவிடம்
பரிந்து பேசும் உமது பலத்தினால், என்னை வாட்டி வதைக்கும்
இச்சிக்கலான துன்பமுடிச்சுகளை,

**(அமைதியாக ஒரு நிமிடம் துன்ப முடிச்சுக்களை மனக்கண்முன் கொண்டுவரவும்)**

உமது தூய திருக்கரங்களில் பெற்றுக்கொள்ளும்,
தந்தையாம் கடவுளின் உன்னத மகிமை வெளிப்படும்படி,
எனது துன்பமுடிச்சுக்களை, இப்பொழுதும்,
என்றென்றைக்கும் அவிழ்த்துப்போடும்,
எனக்கு ஆறுதல் வழங்க கடவுளால் அருளப்பட்டவர் நீர்
எனது பலவீனத்தில் என் வலிமை நீர்,
உம் திருமகன் இயேசுவிடமிருந்து,
என்னைப் பிரிக்கும் சக்திகளை அழிப்பவரும் நீரே
அம்மா எனக்குப் பதில் தாரும், பாதுகாத்தருளும்,வழிநடத்தும் காப்பாற்றும்
ஏனெனில் நீரே என் உறுதியான அடைக்கலம்
உம்மீது என் நம்பிக்கையை வைக்கிறேன். - **ஆமென்.**

**எங்கள் துன்ப முடிச்சுக்களை அவிழ்க்கும் அன்னையே!**
**எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.**



## பங்குத்தளங்களில் எங்கள் அன்னையும் பாதுகாவலியும்

- மனுக்குலத்தை பாவங்களில் இருந்து மீட்பதற்காக இறைவனால் தெரிந்து கொள்ளப்பட்டு பாவமில்லாமல் உற்பவிக்கப்பட்டவள் எங்கள் அன்னை.
- இறைவனின் திட்டத்திற்கு முழுசசம்மதத்தையும் கொடுத்து தன்னையே முழுமையாக மீட்பிற்காக அர்ப்பணித்தவர் எங்கள் அன்னை.
- மனிதர்களின் பழிச் சொல்லுக்கு சிறிதளவும் அஞ்சாமல் இறைவனின் விருப்பத்திற்கே முதலிடம் கொடுத்தவள் எங்கள் அன்னை.
- தான் இறைவனின் தாயாகப் போவதை அறிந்திருந்தும் கர்வம் கொள்ளாது எலிசபேத்தம்மாளைச் சந்தித்து, உதவி செய்யச் சென்றவள் எங்கள் அன்னை.
- தனது ஒரே மகனான இயேசு துன்பப்படப் போவதையும், சிலுவையில் அறையப்பட்டு உயிர் விடப்போவதை அறிந்தி ருந்தும், துன்பமாக இருந்தாலும் இறைவனின் சித்தத்தை ஏற்று வாழ்ந்தவர் எங்கள் அன்னை.
- கானாவூர் திருமணத்தில் இருந்த குறையை தன் மகன் மூலம் நிவர்த்தி செய்த மாதிரி எங்கள் ஒவ்வொருவரின் குறை நிறைகளை அறிந்து எங்களுக்காக இறைவனை மன்றாடி வருபவர் எங்கள் அன்னை.
- இயேசுவின் சிலுவை மரணம் வரை அவருக்குத் துணையிருந்து மனுக்குலத்தின் மீட்புக்குத் துணையிருந்தவள் எங்கள் அன்னை.
- சிலுவையடியில் அவளின் ஒரே மகனான யேசுவினால் மனுக்குலத்திற்கே தாயாக்கப்பட்டதன் மூலம் மனுக்குலத்தின் பாதுகாவலியாகினாள் எங்கள் அன்னை.
- இறைவன் எமக்களித்த அரும்பெரும் கொடை இவள்.
- இறைவனால் மனுக்குலத்திற்களித்த மீட்பை சகலரும் அடைய உதவி புரிபவள் எங்கள் அன்னை.

## கண்ணீர் தேவதாயின் இரத்தக் கண்ணீர்

இயேசுவின் மிகவும் விலையுயர்ந்த திருஇரத்தத்தின் பின், ஆண்டவரையும் மனிதரையும் தொடக்கூடியதும், மிகவும் பலனளிக்கக் கூடியதுமான தேவதாயின் கண்ணீரைவிட வேறு எதுவும் உண்டோ? அவரின் சிலுவைப்பாதையிலும் சிலுவையடியிலும் எவ்வளவு கண்ணீர் சிந்தியிருப்பாள். தன் மகன் மேல் அநியாயமாக சுமத்தப்பட்ட பல நிந்தைப் பரிகாரமாக எவ்வளவு கசந்த கண்ணீர். கடவுளின் கட்டளைக்குப் பணிந்து நடக்காமல், நித்தியத்திற்கும் தம்மை நரக நெருப்புக்குள்ளாக்கும் ஆன்மாக்களுக்காக, எவ்வளவு இரத்தக் கண்ணீர்.

எங்களுடைய நூற்றாண்டுகளிலும் தேவதாயார் கண்ணீர் சொரிந்திருக்கிறாள். பிரான்ஸ் தேசத்தில் லாசவெற் என்னும் இடத்தில் கண்ணீர் வடிக்கின்ற தாயாகவே காட்சியளிக்கின்றாள். அதே பிரகாரம் இத்தாலி தேசத்தில் சிலகூயிஸ் என்னும் இடத்தில் ஒரு வறிய தொழிலாளியின் வீட்டுச் சுவரில் தொங்கவிடப்பட்டிருந்த ஒருமட்கல தேவதாயின் உருவம், உயிருள்ளதாகக் காணப்பட்டு, 1953ம் ஆண்டு ஆவணி 29ந் திகதி தொடக்கம் புரட்டாதி 2ந்திகதி மட்டும் கண்ணீர் சொரிந்த வண்ணம் காட்சியளித்தது. அந்தத் தேசத்தின் ஆயர்கள் இதை நன்கு ஆராய்ந்த பின்னர், இது உண்மையாகவே புதுமை என்று உறுதிப்படுத்தினர். நூறு ஆயிரம் மக்களுக்கு மேல் இந்த சோகக் காட்சியைப் பார்த்தனர். அபோது இருந்த பாப்பரசர் 2ம் பத்திநாதர் வானொலி மூலம் உணர்ச்சிவசப்பட்டு பரவசத்திலாழ்ந்தவராய் “ ஒ! மரியாளின் கண்ணீர்” என உரக்கக் கூவினார்.

பெல்ஜியத்தில் மாஸ்மெஸ்சலன் என்னுமிடத்தில் ‘ தேவ பரம இரகசியத்தின் ரோஜா’ என அழைக்கப்படும் மாதா சுரூபம் 1983ம் ஆண்டு ஆவணி 7ந் திகதி தொடக்கம் இன்றுவரை அடிக்கடி கண்ணீர் சிந்துகிறது. இந்தக் கண்ணீருக்கான காரணத்தை எங்கள் பாப்பரசர் 2ம் அருள் சின்னப்பர் விளக்குகிறார். தேவதாயின் இந்தக் கண்ணீர்கள் **உலகத்தின் பாவ நிலையை எடுத்துக் காட்டுகின்றன. எங்களிடம் செபத்தையும் தபத்தையும் கேட்கின்றாள்.**

### கண்ணீர்ச் செபமாலையின் உற்பத்தி

இந்தக் கண்ணீர்ச் செபமாலையை 1929ம் 1930ம் ஆண்டுகளில் கப்பினாசில் (பிரசில்) சீவித்து வந்த சகோதரி அமாலியாவுக்கு எங்கள் மீட்பராலும் அவரின் திருத்தாயாராலும் வெளியிடப்பட்டது. அந்த மாவட்ட ஆயர் கம்பொ ஒபறெற்றோ இதை ஒரு தேவ வெளிப்படுத்துதல் என உறுதிப்படுத்தினார்.

ஆண்டவர் 1929ம் ஆண்டு நவெம்பர் மாதம் 8ந் திகதி அருள் சகோதரி அமாலியாவுக்கு கூறியதாவது:

* **“ என் மகளே, மனிதர் என் தாயின் கண்ணீரின் பெயரால் எதைக் கேட்டாலும் அதை அன்புடன் அளிப்பேன்”**

1930 ம்ஆண்டில் மார்ச் 8ந் திகதியில் தேவதாயார் அரள் சகோதரி அமாலியாவுக்கு விளக்கம் கொடுத்துக் கூறியதாவது:

* **“ இந்தக் கண்ணீர் செபமாலையின் வழியாக பிசாசு தோற்கடிக்கப்படும். நரகத்தின் ஆட்சி அழிக்கப்படும். இந்தப் பெரிய போருக்கு ஆயத்தம் செய்.**

## கண்ணீர்ச் செபமாலை

### ஆரம்பச் செபம்

(இதை ஜெபிக்கும் போது சாத்தான் பறந்திடுவான்)

சிலுவையில் அறையப்பட்ட இயேசுவே! உமது பாதத்தண்டையில் சாஸ்டாங்கமாக விழுந்து கிடக்கிறேன். உமது துன்பமும் நோக்காடு மிக்க உமது சிலுவையின் பாதையிலே உள்ளார்ந்த இரக்கத்துடன் கூடிய அன்போடு உம்மைப் பின்தொடர்ந்து சென்ற உமது தாயாரின் கண்ணீரை உமக்கு ஒப்புக் கொடுக்கின்றோம். ஓ! நல்ல எசமானே! எமது அதிபரிசுத்த தாயாரின் கண்ணீர் கற்பிக்கும் பாடங்களை எமது உள்ளங்களில் பதியச் செய்தருளும். ஆதனால் நாம் இவ்வுலகில் உமது திருச் சித்தத்தை நிறைவேற்றவும், உம்மை பரலோகத்தில் என்றென்றும் போற்றிப் புகழவும் வரம் பெறுவோமாக. – ஆமென்.

**பெரிய மணியில்**

(பரலோக மந்திரத்துக்குப் பதிலாக)

ஓ! இயேசுவே! இந்த உலகில் அதிகம் உம்மை அன்பு செய்தவளும், விண்ணகத்தில் அதிநெருங்கிய விதமாக உம்மை அன்பு செய்பவளுமாகிய உமது அன்னையின் இரத்தக் கண்ணீர்களை உற்றுப் பார்த்தருளும்.

**சிறிய மணியில்**

(அருள் நிறைந்த மரியாயே செபத்திற்குப் பதிலாக)

ஓ! இயேசுவே! எமது அன்பு மிகுதாயாள் சிந்திய இரத்தக் கண்ணீரின் பொருட்டு – எமது மன்றாட்டுக்களைக் கேட்டருளும்.

**முடிவில்:**

ஓ! இயேசுவே! இந்த உலகில் அதிகம் உம்மை அன்பு செய்தவரும்.....3முறை

ஓ! மரியாயே அன்பு மிக்க தாயே!

துயரமும் இரக்கமும் மிகுந்த அம்மா! எமது செபங்களை உம்முடைய செபங்களோடு இணைத்து உமது திருமகனிடம் ஒப்படைத்தருளும்.அவரை நோக்கி நாங்கள் எமது உள்ளங்களைத் திருப்புகின்றோம். உமது கண்ணீரைப் பார்த்து எமது செபங்களைக் கனிவுடன் ஏற்றுக் கொள்வாராக. நாங்கள் கேட்கும் வரங்களைத் தந்து எமக்கு நித்திய பேரின்ப மகிமையைத் தந்தருள்வீராக! ஆமென்.

ஓ! வியாகுலம் நிறைந்த தாயே!

உமது கண்ணீர் சாத்தானின் ஆதிக்கத்தை அழிப்பதாக! எல்லாம் வல்ல அன்பு இயேசுவே எமது தெய்வீக கருணையினால் உலகை இன்று பயங்கரத்துக்கு உள்ளாக்கும் தவறுகளிலிருந்து பாதுகாப்பீராக! ஆமென்

## தாய்த் திருச்சபையில் அன்னையின் சிறப்பு

தாய்த் திருச்சபையில் அன்னை மரியாளுக்கு என்று ஒரு தனி இடம் உண்டு. லூர்து மாதா, பாத்திமா மாதா, சகாயமாதா, ஆரோக்கிய மாதா போன்ற எண்ணற்ற திருப்பெயர்கள் அவருக்கு மட்டும்தான் உண்டு. இயேசுவுக்கு அடுத்து, அதிகமான திருவிழாக்களும் அவருக்குத்தான். ஏறக்குறைய இயேசுவுக்கு என்னென்ன திருவிழாக்கள் உண்டோ, அவைகள் எல்லாம் மாதாவுக்கும் உண்டு. அதிகமான திருக்காட்சிகள் கொடுத்திருப்பவரும் அவரே. அதிகமான திருத்தலங்கள் இருப்பதும் அவருக்கே.

தாய்த் திருச்சபையானது, அவரை இயேசுவுக்கு அடுத்த நிலையில் வைத்து அழகு பார்க்கிறது. அவரைப் புனிதர்களில் முதன்மையானவராகவும், சீடத்துவ வாழ்க்கையின் இலக்கணமாகவும், விசுவாசிகளின் மாதிரியாகவும் அடையாளம் காட்டுகிறது. அவரை இயேசுவின் தாய், மீட்பரின் தாய், ஆண்டவரின் தாய், திருச்சபையின் தாய், மனுக்குலத்தின் தாய் என்று அழைத்து மகிழ்கின்றது. வாரத்தில் ஒவ்வொரு சனிக்கிழமையும் மாதா நாள். குறிப்பாக, முதல் சனிக்கிழமை அவருக்கே உரியது. அது மட்டுமா? வருடத்தில் இரண்டு மாதங்கள், மே மற்றும் அக்டோபர், அவருக்கென்றே ஒதுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாதமும் ஏதாவது ஒரு திருநாள் மாதாவுக்கு இருக்கிறது.

வருடமே மாதாவின் திருவிழாவோடுதான் ஆரம்பிக்கிறது:
ஜனவரி 1, மரியாள் கடவுளின் தாய்,
பெப்ரவரி 11, லூர்து மாதா திருவிழா,
மார்ச் 25 கபிரியேல் தூதர் மங்கள் வார்த்தை சொன்ன திருநாள்,
ஏப்ரல் 26 நல்லாலோசனை மாதா திருநாள்,
மே 13 பாத்திமா மாதா திருநாள்,
மே 31 மினவின மாதா திருநாள்,
ஜீன் 25 அமைதி அன்னை திருவிழா,
ஜீலை 16 கார்மேல் மாதா திருவிழா,
ஆகஸ்ட் 15 பரலோக மாதா,
செப்டம்பர் 8 மாதாவின் பிறந்த நாள்,
15 வியாகுல மாதா திருநாள்,
24 உபகார மாதா திருவிழா
அக்டோபர் 7 செபமாலை மாதா,
நவம்பர் 21 காணிக்கை மாதா,
டிசம்பர் 8 அமலோற்பவ மாதா திருவிழாக்கள். இங்கே ஒரு சில முக்கியமான திருவிழாக்களை மட்டும்தான் நாம் குறிப்பிட்டுள்ளோம். இன்னும் மாதாவின் திருவிழாக்கள் ஏராளம் உண்டு.

மேலும், திருச்சபையில் எண்ணற்ற புனிதர்கள் இருந்தாலும், மரியாளைக் குறித்து மட்டும்தான் விசுவாசக் கோட்பாடுகள் உண்டு. அவைகள் மொத்தம் நான்கு:

1) அன்னை மரியாள் என்றும் கன்னிகை (4 ஆம் நூற்றாண்டு புனித அகுஸ்தினார் காலத்திலிருந்தே நம்பப்படுகிறது).
2) மரியாள் இறைவனின் தாய் (எபேசு திருச்சங்கம் 431 ஆம் ஆண்டு வரையறுக்கிறது).
3) மரியாள் அமல உற்பவி (பாப்பரசர் 9ஆம் பத்திநாதர் 1854ல் பிரகடனப்படுத்தினார்).
4) மரியாளின் விண்ணேற்றம் (பாப்பரசர் 12ஆம் பத்திநாதர் 1950ல் பிரகடனப்படுத்தினார்).

## அம்மா எங்கள் வீட்டுக்கு வந்தபோது

அம்மா எங்கள் வீட்டுக்கு வந்தபோது
எங்களோட மனசு பேசுது
அன்புள்ள அம்மா இந்த வீட்டிலேயே
உம் அருள் மழை பொழிந்த ஈரத்தில்
எங்கள் மனசு பேசித்தான் பார்க்கின்றது
எண்ணில்லா அற்புதங்கள் விழையச் செய்த
விந்தையைச் சொல்லியே வேர்க்கின்றது.
ஊரிலும் ஊனிலும் கலந்த உம்மை
வந்தனம் சொல்லியே வாழ்த்துகின்றது.
தெய்வபக்தி கொண்ட முன்னோர்
நேச பக்தி கொண்ட நல்லோர்
பாசமிகு பெற்றோர்
வீறு நடை இளைஞர்கள்
பைந்தமிழ்ச் சிறார்கள்
அருட்செல்வம் பொருட்செல்வம் பாடும் மக்கள்
வாடாத வசந்தங்கள்! வற்றாத வளங்கள்
சுகமான பொழுதுகள், ஈட்டியின் ஒத்துழைப்பு
இதயங்களின் உழைப்பு
இவை அத்தனையும் தந்தபோது
இதமான நன்மையை மனது இப்போது எடுத்தியம்புகின்றது.
விருந்து படைத்தே கொண்டாடுகின்றது
இன்னும் எம்மால் ஏலும் நற்செயல்கள் யாவும்
உம் அருளால் செய்திட இன்னமும் வரவேண்டும்
அம்மா ஆசையோடு எம் மனசு பேசித்தான் பார்க்கின்றது

## தாயாக நீயிருப்பாய்

மௌனமோ என்னை முடக்குகின்றது
உன்புகழைக் கூறுவதால்

தேகமோ என்னை அச்சுறுத்துகின்றது
உம்சாயலைப் பெறுவதால்

விழிகளோ என்னை எரிக்கின்றது
உம் எழிலை இரசிப்பதால்

செவிகளோ என்னை அதிர்ச்சியடையச் செய்கின்றது
உன் இசையைக் கேட்பதால்

கால்களோ என்னை நடுங்கச் செய்கின்றது
உன் நினைவில் நான் வாழ்வதால்

எண்ணமோ என்னை ஏளனம் செய்கின்றது
உம் எளிமையைக் கடைப்பிடிப்பதால்

ஆன்மாவோ என்னை ஏற்க மறுக்கின்றது
உம் ஆன்மாவைப் பெறுவதால்

## நற்குணங்களின் உறைவிடமே

உன்னத தேவனுக்கே உயிர் கொடுத்தவள் நீ
தலைமைப் பொறுப்பை தாழ்மையுடன் ஏற்றவள் நீ
ஆம் என்ற சொல்லில் அடைக்கலமாகி
தியாகம் என்ற சொல்லில் தெய்வத்தின் தாயானாய்
ஆண்டி வந்தோரெல்லாம் அரவணைத்தவள் நீ
குறைகளையெல்லாம் நிறைவாக்கியவள் நீ
இதோ உன் தாயென்ற இறைமகனின் சொல்லுக்கு
சேயல் உருவம் கொடுத்தவள் நீ
அன்றோ கபிரியல் தூதரின் மங்கள வார்த்தை.
இன்றோ மனிதர்களின் இதயத்து வேட்கை
உலகமக்களுக்கெல்லாம் உன்னதத் தாயே
எங்கள் விண்ணக மண்ணக இராக்கினியே
அருள் நிறைந்த கன்னியே, வாழ்க! வாழ்க!
அன்னையே நீர் வாழ்க!

## மாலை நேரத்தென்றலோடு

மௌனப்புன்னகையில் மகுடம் தரித்தவளே!
ஆகட்டும் என்ற சொல்லில் அகிலத்தை அசைத்தவளே!
புந்தியில் பரிந்து பேசி பாசத்தை பரிமாறியவளே!
எலிசபேத்தைச் சந்தித்து எளியோரை நேசித்தவளே!
அடிமையெனப் பணிந்து விடுதலைக் கீதம் இசைத்தவளே!
மனுமகனைச் சுமந்து மானிடக் குலத்தையே ஈர்ந்தவளே!
மாலை நேரத்தென்றலோடு காலைத் தொட்டு வணங்குகிறேன்
ஜெபமாலை சொல்லியே உன்புகழ் சாற்றுகின்றேன்.

## அம்மா நீ வேண்டும்

அம்மா நீ வேண்டும்
நீ வேண்டும் தாயாக
அம்மா நீ வேண்டும்

என் உறவின் ஊற்றாய்
வாழ்வின் வளமாய்
அவலநிலையில் அபயமாய்
மகிழ்ச்சியின் அலையாய்
சலனத்தில் தென்றலாய்
சந்திக்கும் தாயாக
அம்மா நீ வேண்டும்

## ஆலயமாக்க

மௌனத்தை வாசிக்கின்றேன்
மனிதனின் ஆயுதத்தைப் புரிய
அன்னையை சுவாசிக்கிறேன்
ஆன்மாவின் ராகத்தைப் பாட
ஆம் என்று உச்சரிக்கிறேன்
என் இதயத்தை ஆலயமாக்க

## நம்பிக்கை

யானையின் பலம் தும்பிக்கையிலே. மனிதனின் பலம் நம்பிக்கையிலே. நம்பிக்கை கொள் உழைப்பின் மீதும் உன் மீதும், வெற்றி காலடியில் விழுந்து கிடக்கும். உன்னை வியர்வைத் துளிகளால் நனைத்துப்பார். பாதம் படியும் இடமெல்லாம் நம்பிக்கை பிறக்கும். தோல்வி கிடையாது நம்பிக்கைக்கு. இமயமும் கூழாங்கல்லாகும். ஆழ்கடலும் உன் இடுப்புக்குக் கீழ் வரும். நீ எதிலும் நம்பிக்கை வை. அதிலும் நீ ஜெபிக்கின்ற ஜெபமாலையில் அதிகமாய் நம்பிக்கை வை. வெற்றி எப்போதும் உன்பக்கம்தான்.

## விடியும் பொழுது

அம்மா என் அருகில் நீயிருந்தால்
உன் அருகில் நானிருந்தால்
இப்படித்தான் என்பொழுது விடியும்

இன்னல் வந்தாலும்
மின்னலாய் மறையும்

வளமை அழிந்தாலும்
வாழ்க்கை செழிக்கும்

சோதனை கூடினாலும்
சாதனையும் கூடும்

கொடுமை நிகழ்ந்தாலும்
கொண்டாட்டமும் நிகழும்

பாதை கசந்தாலும்
பயணம் இனிக்கும்

தோல்வி ஏற்பட்டாலும்
வெற்றியும் ஏற்படும்

அவமானம் வந்தாலும்
வெகுமானமும் வரும்

வயிறு பசித்தாலும்
மனசு நிறையும்

அதிர்ச்சி அத்தனையிலும்
முதிர்ச்சி இடம் பெறும்
இப்படித்தான் என்பொழுது விடியும்

அம்மா என் அருகில் நீயிருந்தால்
உன் அருகில் நானிருந்தால்
இப்படித்தான் என்பொழுது விடியும்

## நம்பிக்கையின் நாற்றுக்கள்

நம்பிக்கையின் நாற்றுக்கள் ஆயிரம், நன்மையின் ஊற்றுக்கள் ஆயிரம், வல-மையின் கோபுரம், வசந்தத்தின் பூபாளம் இவை அனைத்தையும் நினைத்துப் பார்த்தால் நம் அன்னையின் எழில் முகம் தெரியும். விலைமதிக்க முடியாத விழிகளின் பார்வை எலிசபேத்து மீது விழுந்தபோது மகிழ்ச்சியின் அக்களிப்பு நிலவியது. இரசம் தீர்ந்து விட்டபோது தண்ணீர் திராட்சை இரசமாக பரிந்து பேசியவுடன் மகிழ்ச்சி மிகுதியாகக்கூடியது. ஏங்களின் பார்வை எங்கள் அயலார்க்கு அக்களிப்பாக நிலவட்டும். தண்ணீர் திராட்சை இரசமாக மாறியதுபோல எங்கள் கண்ணீர் பன்னீராக மாறி பலருக்கு மனநிறைவு தரட்டும். அன்னையே உம் உறவும், உணர்வும் என்னையே ஆட்கொள்ளட்டும். அப்போது எனது சந்திப்பும் எனது கண்ணீரும் பிறருக்கு 1000மடங்கு நம்பிக்கையின் ஊற்றாகும், நன்மையின் ஊற்றாகும். அன்னை மரியாவாக நாம் அவதாரம் எடுக்க நம் அயலாருக்கு நாம் எப்போதுமே துணைபுரிய அரள் தரம் திருப்பலி நம்மை அழைக்கின்றது. அன்னையின் உதவும் உணர்வும் நம்மையே ஆட்கொள்ள அவர் மகன் யேசுவின் கல்வாரிப்பலி நமக்கு 1000 மடங்கு பலன் தர நம்மை அன்போடு அழைக்கின்றது. அன்போடு ஜெபிப்போம். ஆற்றலைப் பெற்று அன்னையைப் போலவே நடப்போம்.

# செபமாலைப் பக்தி தோன்றிய வரலாறு

செபமாலை என்பது செபம் - மாலை என்று பிரித்துப் பொருள் கொள்ளுமாறு அமைந்துள்ளது. நம்முடைய செபங்கள் அனைத்தையும் சேர்த்து ஒரு மாலையாக நம் இறை அன்னை மூலம் இறைவனுக்குச் சமர்ப்பிப்பதே செப-மாலை.

**வரலாற்றின் வழியில்**

கி.பி.4ம் நூற்றாண்டில் பாலைவனத்தில் தங்களுடைய வாழ்க்கையைத் தியானத்திலும், செபத்திலும் ஊன்றியிருந்த துறவிகளே, முதன் முதலில் செப-மாலைப் பக்திக்கு அடிகோலியவர்கள். இறை இயேசுவின், இறை அன்னை மீது கொண்ட பக்தியின், பிரதிபலிப்பே செபமாலையாக உருவெடுத்தது. அவர்கள் உருவாக்கிய செபமாலைப் பக்தி தற்போதுள்ள செபமாலைப் பக்தியைப் போலல்லாமல், முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. அவர்களுடைய செபமாலைய-ில் 500 மணிகள் கூட இருந்ததாக செய்திகள் கூறுகின்றன.

நமது இறைஅன்னை 13ம் நூற்றாண்டில் புனித டோமினிக் அவர்களுக்கு அளித்த காட்சியில் செபமாலையைக் கொடுத்து அதன் பக்தியைப் பரப்பச் செய்யுமாறு கேட்டுக் கொண்டதாக திருச்சபையின் பாரம்பரியமும் செவிவழிச் செய்திகளும் குறிப்பிடுகின்றன. காலப்போக்கில் 500மணிச் செபமாலை மறைந்து, 150 திருப்பாடல்களை அடிப்படையாகக் கொண்டு 150 மணிகளைக் கொண்ட செபமாலையாக உருவெடுத்தது. 14ம் நூற்றாண்டில் இயேசுவை அல்லது மரியாவைக் குறிக்கும் வசனங்கள் திருப்பாடல்களின் முதலிலோ, முடிவிலோ இணைத்துச் சொல்லப்பட்டன. நாளடைவில் திருப்பாடல்கள் கைவிடப்பட்டு மரியன்னை அல்லது இயேசுவை குறிக்கும் வசனங்கள் மட்டும் செபிக்கப்பட்டன.

**அன்னையின் காட்சிகளில் சில**
**லூர்து நகர்**

1858 ம் வருடம் யூலை 11ம் தேதியிலிருந்து யூலை 16ந் தேதிக்கு இடைப்பட்ட காலங்களில் அன்னை மரியா, மரியபெர்ணதேத்து என்ற 14 வயது சிறுமிக்கு 18 முறை காட்சி தந்தார். காட்சி தந்த இடம் மாசபியேல் என்ற குகை. பலவகை உடல் நோயால் பாதிக்கப்பட்டவர்களும், மனக்கஉரங்களால் அவதிப்படுவோரும் அன்னையின் வழியாகக் குணம் பெறுகின்றனர். இக்காட்சியில் அன்னை இரண்டு வேண்டுகோள் வைத்தார். அவை யாதெனில் செபம் தபம். அன்னைமரியாள் தன்னை அமலஉற்பவியாக இக்காட்சியில் வெளிப்படுத்தினார். லூர்து அன்னையின் திருவிழா பிப்ரவரி 11ந் திகதி கொண்டாடப்படுகிறது.

**18காட்சிகளில் முக்கியமானவை**

6வது காட்சி – பாவிகளுக்காக மன்றாடுங்கள்.
10வது காட்சி - ஒரு ஆலயம் கட்ட வேண்டுகோள்.
16வது காட்சி – அமல உற்பவம் நானே என்று தன்னை வெளிப்படுத்தினார்

**18 காட்சிகளில் முக்கியமானவை**

6வது காட்சி – பாவிகளுக்காக மன்றாடுங்கள்.

10வது காட்சி - ஒரு ஆலயம் கட்ட வேண்டுகோள்.

16வது காட்சி – அமல உற்பவம் நானே என்று தன்னை வெளிப்படுத்தினார்

**பாத்திமா நகர்**

போர்த்துக்கல் நாட்டின் மலைப்பாங்கான பகுதியில் அன்னை மரியா, லூாசியா, ஜெசிந்தா, பிரான்சிஒ என்ற மூவருக்கு, 1917 ம் ஆண்டு மே மாதம் 13ந் தேதி காட்சி தந்தார்கள். அதன் பிறகு 6 மாதங்களுக்கு தொடர்ந்து 13ம் நாளில் காட்சி அளித்தார்கள். 13-10-1917ல் தன்னுடைய இறுதிக் காட்சியின் போது தன்னை செபமாலை அன்னை என்று வெளிப்படுத்தினார்.

**அன்னையின் வேண்டுகோள்**

செபமாலை சொல்லவேண்டும்
மனிதர்கள் மனம் திரும்ப வேண்டும்
ஆண்டவரை புண்படுத்தும் செயல்களை மக்கள் நிறுத்தவேண்டும்.
விசுவாசத்தை நிலை நிறுத்த வேண்டும்.



## " அமல உற்பவ அன்னை" பிரசீடிய அங்கத்தவர்கள் பாரிஸ்

| | |
|---|---|
| தலைவி: | திருமதி: றிற்றா செல்லரட்ணம் |
| உபதலைவி: | திருமதி: மேரிறோஸ் |
| செயலாளர்: | திருமதி: சகாயசீலி |
| உப செயலாளர்: | திருமதி. மனோகரி கீதபொன்கலன் |
| பொருளாளர்: | திருவாளர் லடீஸ்சும் |
| உபபொருளாளர்: | திருமதி: சுகிர்தா அந்தோனிப் பிள்ளை |
| அங்கத்தவர்கள்: | சகோதரி ஜோசப்பம்மா |
| | அன்னா |
| | கிறிஸ்ரினா |
| | றோஸ்மலர் |
| | ராஜினி |
| | பெயாற்றிஸ் |
| | ஜேறாணி |
| | அற்புதம் |
| | மேரி ஜொய்சி ஜோஸ்ரின் |
| | மெக்ரலின் (றூாபி) |
| | வில்டா |
| | யசிந்தா (சாந்தி) |
| | மரியராணி |
| | ஜெனற் |
| | யூடித் |
| | குயின்மேரி |
| | ஜேந்தி |
| | யூக்கறிஸ்ரா |


அம்மா உன் மலர்ப்பாதம் வருவேன்
கனிவான அருளாலே அணைப்பாய்


அமலோற்பவமாதா
பெருவிழா
11h30
09.12.2012
அம்மா உன் மலர்ப்பாதம் வருவேன்
கனிவான அருளாலே அணைப்பாய்







**இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்**

**Chapelle Notre Dame Réconciliatrice,**

**57 Bd. De Belleville. Paris. 75011.**

**Tel : 01-48-06-95-05. Fax : 01-48-06-95-10.**
**www.uravukal.org**